**சுருக்கம்**

தெருவிளக்குகள் அமைத்தல் - பேரூராட்சி பகுதிகளில் புதிய தெரு மின் குழல் விளக்குகள் அமைக்க ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை**

அரசாணை (2டி) எண்.13 நாள் 20.02.2004

படிக்க

பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித எண். 10676/2003/டி3 நாள். 22.01.2004

****

ஆணை

பேரூராட்சிகள் தொடர்பான 2003-2004ஆம் ஆண்டைய கொள்கை விளக்கக் குறிப்பில் 10,000/- தெரு மின் குழல் விளக்குகள் விஸ்தரிப்பு செய்யப்பட்ட மற்றும் முக்கிய பேரூராட்சிப் பகுதிகளில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 611 பேரூராட்சிகளிலுள்ள பகுதிகளில் 10,000 தெரு மின் விளக்குகள் அமைக்க தலா ரூ.5,000/- வீதம் ரூ.500.00 இலட்சம் தேவைப்படுகிறது என்றும் மேற்படி மானியத் தொகையினை அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கும்படியும் பேரூராட்சிகள் இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே பத்தி ஒன்றில் உள்ள பேரூராட்சிகள் இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின் பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பை ஏற்று 611 பேரூராட்சிகளிலுள்ள பகுதிகளில் 10,000 புதிய தெரு மின் குழல் விளக்குகள் அமைக்க தலா ரூ.5,000/- வீதம் ரூ.5.00 கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) மான்யமாக நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்

2515-00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 193-நகர்ப்புற உள்ளாட்சிஅமைப்புகள் அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II மாநிலத் திட்டம் துஹ- பேரூராட்சிகளுக்கான

சிறப்புத் திட்டம் -09-உதவி மானியங்கள் 02 மூலதனச் செலவுக்கான மான்யங்கள் (DPC எண்.2515 00 193 JA 09 28)

4. 2003-2004க்கான இறுதி திருத்திய ஒதுக்கீட்டில் (FMA ) தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இறுதி திருத்திய நிதி ஒதுக்கீட்டில் இதற்குரிய அடையாள நிதி ஒதுக்கீடு 2003-2004ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மான்யக்கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு சம்பந்தமான செயற்குறிப்பை நிதித்துறைக்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5.மேலே பத்தி இரண்டில் அனுமதிக்கப்பட்ட தொகையினை பேரூராட்சிகளின் இயக்குநர் பெற்று, பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு பிரித்தளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. இக்கோப்பு நிதித்துறையின் அ.சா.கு.எண்.12039/ந.நி(ம) கு.வ/2004 நாள். 20.02.2004ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.என்.விஜயராகவன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை-108
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-1
முதன்மை மாநில கணக்காயர், (தணிக்கை-1) சென்னை-18
மாநில கணக்காயர் (தணிக்கை -2) சென்னை-35

நகல்:-

மண்டல பேரூராட்சிகளின் இயக்குநர்கள்
நிதி (நநி(ம) கு.வ). /பிஜி-2/சென்னை-9
நநி(ம) கு.வ (வ.செ) துறை, சென்னை-9
இ.கோப்பு/ உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

பிற்சேர்க்கை

மாவட்ட வாரியாக பேரூராட்சிகளில் தெரு விளக்குகள் அமைக்க 2003-2004ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை

| வ.எண். | மாவட்டம் | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | தெரு விளக்குகளின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சீபுரம் | 28 | 1410 | 0.705 |
| 2 | திருவள்ளூர் | 19 | 650 | 0.325 |
| 3 | வேலூர் | 27 | 340 | 0.170 |
| 4 | திருவண்ணாமலை | 10 | 240 | 0.120 |
| 5 | தருமபுரி | 17 | 250 | 0.125 |
| 6 | சேலம் | 34 | 110 | 0.055 |
| 7 | நாமக்கல் | 20 | 210 | 0.105 |
| 8 | ஈரோடு | 59 | 760 | 0.380 |
| 9 | கோயம்புத்தூர் | 59 | 780 | 0.390 |
| 10 | நீலகிரி | 13 | 210 | 0.105 |
| 11 | கடலூர் | 16 | 300 | 0.150 |
| 12 | விழுப்புரம் | 16 | 450 | 0.225 |
| 13 | தஞ்சாவூர் | 22 | 280 | 0.140 |
| 14 | நாகப்பட்டினம் | 9 | 150 | 0.075 |
| 15 | திருவாரூர் | 7 | 150 | 0.075 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 18 | 360 | 0.180 |
| 17 | பெரம்பலூர் | 9 | 160 | 0.080 |
| 18 | புதுக்கோட்டை | 8 | 180 | 0.090 |
| 19 | திண்டுக்கல் | 24 | 300 | 0.150 |
| 20 | கரூர் | 13 | 180 | 0.090 |
| 21 | மதுரை | 15 | 310 | 0.155 |
| 22 | தேனி | 23 | 240 | 0.120 |
| 23 | இராமநாதபுரம் | 9 | 410 | 0.205 |
| 24 | விருதுநகர் | 10 | 200 | 0.100 |
| 25 | சிவகங்கை | 12 | 210 | 0.105 |
| 26 | திருநெல்வேலி | 33 | 350 | 0.175 |
| 27 | தூத்துக்குடி | 20 | 170 | 0.085 |
| 28 | கன்னியாகுமரி | 56 | 640 | 0.320 |
| | மொத்தம் | 611 | 10000 | 5.000 |